விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 புரட்டாதி 21 ஜுலகஜ் 19 இதழ் 236

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7—10—82

லொறி விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 27 ஸ்ரீ 9416 இலக்க இசுசு லொறி விற்பனைக்கு உண்டு.

கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம்:-

V. M. சண்முகம்
No. 85. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [4770]

## இலவச விநியோகம்!

[பண்டத்தரிப்பு]

தொல்புரம் கமநலச்சேவை நிலையத்தில் விவசாயிகளுக்கான விவசாய அடையாள அட்டைகள் தற்பொழுது எவ்விதகட்டணங்களும் அறவிடப்படாது இலவசமாக வழங்கப்படுவதாக பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பி. சூசைப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் விவசாய அடையாள அட்டைகள் பெறுவதற்கு புகைப்படமும், 4ரூபா பணமும்அறவிடப்பட்டு வந்தது. இப்போது அந்த முறை நீக்கப்பட்டு தேசிய

[8ம் பக்கம் பார்க்க]

### ஜனதிபதி தேர்தலில் பொதுச்சபை முடிவு:

# வடக்கு கிழக்கில் விளக்கக் கூட்டங்கள் நடத்தப்படும்

## கூட்டணி பாராளுமன்றக் குழு தீர்மானம்

### பட்டிருப்பு எம். பி. பங்குபற்றவில்லை

(கொழும்பு)

**ஜனதிபதி தேர்தலில் பங்குபற்றுவதில்லையென்றும், வாக்களிப்பதில்லையென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை முடிவை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டங்கள் வைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கு விளங்கப்படுத்துவதென நேற்றுக் கூடிய கூட்டணிப் பாராளுமன்றக்குழு தீர்மானித்துள்ளது.**

கூட்டணித் தலைவர் திரு, எம். சிவசிதம்பரம் தலைமையில் கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த இக்கூட்டத்தில், முதலாவது கூட்டத்தை இந்தவார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

சகல கூட்டணி எம். பிக்களுக்கும், அவசர தந்திமூலம் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில் பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் கலந்துகொள்ளவில்லை. (இ)

## கணேசலிங்கத்தை 'சிவா' சந்திப்பார்

[யாழ்ப்பாணம்]

ஜனதிபதிதேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாக்களிப்பதென மட்டக்களப்புத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்சபை எடுத்த முடிவு தொடர்பாகப் பட்டிருப்பு எம். பி திரு பூ. கணேசலிங்கத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், நேரில் சந்தித்துப்பேசவுள்ளார்.

கொழும்பில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் அவரது இல்லத்தில் நேற்றுமாலை நடைபெற்ற கூட்டணி பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இதுபற்றி கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது நாளை மட்டக்களப்பு செல்வதாக தெரிவித்தார். (மா)

## மன்னிப்புக் கோருகிறேம் சமரச தீர்வு

1980-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ந் திகதி தொடக்கம் 11-ந் திகதிவரை வெளிவந்த 'ஈழநாடு' நாளிதழ்களில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விவகாரங்கள் சம்பந்தமாக வெளிவந்த எமது செய்திகளில் சில குறிப்பாக:-

1. கட்டடச் செலவுகளுக்காகச் சேர்க்கப்பட்ட பணங்களுக்குப் பத்து வருடங்களாகக் கணக்கு விபரங்கள் எதுவுமில்லை. 2. உணவுத் தரக்குறைவினுல் விடுதி மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி 3. மாணவர் அனுமதி தொடர்பாகக் கல்வித்திணைக்கள அறிவுறுத்தல்கள் பேணப்படவில்லை. 4. விளையாட்டு மைதானத்தை மரவள்ளித்தோட்டமாக மாற்ற வேண்டுமென அதிபர் கூறினுர். 5. உதைபந்தாட்டக் குழுவில் பாங்கொக் செல்லவிருந்த மாணவரை அதிபர் தடைசெய்தார். 6. கல்லூரியிலிருந்த ஆசிரியர்கள் சிலரைக் கல்லூரி அதிபர் மாற்றுவித்தார். 7. ஒரு வார காலத்தில் அதிபர் இடமாற்றம்பெற்றுச் செல்லச் சம்மதித்தார். 8. பெற்றேர் குழுவின் வேண்டுகோளுக்கமைய அதிபர் இருவார லீவில் செல்வது பற்றிய சம்மதத்தைத் தெரிவிப்பார்.

என்ற செய்திகள் தவருனவையும் உண்மையற்றவையுமென அந்நாளைய யாழ். மத்திய கல்லூரி அதிபரும், தற்போது கல்வி அமைச்சின் கல்வி பணிப்பாளருமான திரு இ. கே. சண்முகநாதன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதை ஏற்று மேற்கூறிய செய்திகளினுல் திரு. இ. கே. சண்முகநாதனுக்கு ஏற்பட்ட மனவேதனைக்கும் மானக்குறைவுக்குமாக அவரிடம் மன்னிப்புக்கோருகிறேம்.

நிர்வாகி
ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்

## "டேவிட்சனை விடுதலைசெய்க"

### யாழ். பெற்றேர் ஜனதிபதிக்கு தந்தி

[யாழ்ப்பாணம்]

ஈழமாணவர் பொதுமன்றத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. டேவிட்சனையும் தேவதாசையும் கைதுசெய்யப்பட்ட மற்றும் எல்லோரையும் மனிதாபிமானத்துடன் உடனே விடுதலைசெய்யவேண்டுமென்று கோரும் தந்தி ஒன்றை யாழ். பெற்றேர்சங்கம் ஜனதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது. சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் சட்டத்தரணி சி. பொன்னையா ஜனதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அத்தந்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

திரு. டேவிட்சன் வெளியிட்ட விளம்பரத்தாள் சட்ட

[8-ம் பக்கம் பார்க்க]

## 'குட்டிமணி ஜெகனை விடுதலைசெய்க'

### மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் வற்புறுத்து

[யாழ்ப்பாணம்]

"செல்வராஜா யோகச்சந்திரன் அல்லது குட்டிமணியையும் கணேஷநாதன் ஜெகநாதன் அல்லது ஜெகனையும் தூக்கிலிட எடுத்த முடிவை வன்மையாக எதிர்க்கும் மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் இவ்விருவரும் அரசியல கைதிகளாகையால் அவர்களுக்கு விதித்துள்ள இத்தண்டனையை ரத்துச்செய்யும்படியும், குட்டிமணி, ஜெகன் உட்பட இலங்கையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சகல அரசியல் கைதிகளையும் சந்தேகநபர்களையும் உடன் விடுதலை செய்யும்படியும் மீண்டும் கேட்டுக்கொள்கிறது."

இவ்வாறு கோரும் பத்திரிகை அறிக்கையொன்றை மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் வெளியிட்டுள்ளது.

"நியாயத்திற்காகவும் நீதிக்காகவும் முன்நிற்போரை வேட்டையாடுவதற்காக வகுத்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு விசேஷ விதிகள் சட்டத்தினை உடன் இரத்துச்செய்யும்படி இயக்கம் மீண்டும் அரசை வற்புறுத்துகின்றது" என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வட்டு எம். பி. தெரிவு!

## 'அமிர்' நாடு திரும்பியதும் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு எம். பி. ஒருவரைத் நேற்றுத் தமிழர் விடுதலைக் கூட்டணி நியமனக்குழு தெரிவு செய்துள்ளது.

கூட்டணி தலைவர் திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நியமனக்குழு கூடியது.

வட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் பல விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். ஆனல் தெரிவானவரின் பெயரை இரகசியமாக வைத்திருப்பதென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தேர்தல் சட்டத்திற்கமைய கட்சியின் செயலாளர் நாயகமே கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்ற முறையில் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டியிருப்பதால் வெளிநாடுசென்றுள்ள கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. ஏ அமிர்தலிங்கம் நாடு திரும்பியபின் வட்டுக்கோட்டை பற்றிய முடிவை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பார். [இ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நுணுவில் சந்திக்கருகாமையிலுள்ள ஒழுங்கையில் ஐந்து பரப்பு குடியிருப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி மகேஸ்வரி செல்வரட்னம், உப்புமடம், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 4751

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆட்டருக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

## தேவை

கைப்பைகள் தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும். பான்சி பலெஸ், மடத்தடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 4748

பளைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் பிரதான வீதி ஒரமாக 20 அல்லது 25 ஏக்கர் காணி விற்பனைக்கு இருந்தால் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்ட கொள்ளவும். கா. மோகனதாஸ், 104/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4755

மருதனுமடத்தில் இருக்கும் சேவிஸ் ஸ்ரேசனுக்கு வாகனங்கள் கழுவுவதற்கும், சேவிஸ் செய்வதற்கும் வேலை ஆட்கள் தேவை. கீழ்க்காணும்விலாசத்துக்கு சான்றிதழ்களுடன் 15-10-82க்கு முன் நேரில் வரவும். மனேச்சர், லங்கா சேவிஸ் ஸ்டேசன், மருதனுமடம். 4744

## தேவை

றேடியோ, ரி வி வீடியோ டெக் ரெக்னிசியன் பல வருட அனுபவமுள்ளவர் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும் விண்ணப்பிக்க; விளம்பர இல:4766 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4766

## பயிற்சி

றேடியோ — டெலிவிஷன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சிகள் Spoken English ரெலெக்ஸ் Hotel Management பயிற்சிகளிற்கும் 10-10-82 வரை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். விபரங்களுக்கு: The School of Computer Studies, 52, கனகரத்தினம் கட்டிடம் மேல் மாடி, வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4741)

## WANTED

Refrigeration Electrical Mechanic with thorough knowledge in Cold Room Plate Freezer and Electrical Work. Salarynegotiable Apply. The Director, Andriesz and Co Ltd, Kandy Road, Navatkuli. (4759)

## மன்னாரில் சோதனை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெறுதவர்களை கண்டுபிடிக்கும் பொருட்டுவீடு வீடாகச்சென்று வானொலி, தொலைக்காட்சி உத்தவுப்பத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டுவருகிறது.

வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளின் உத்தரவுப்பத்திரங்களைப் பரிசோதிக்கும் வேலை ஆரம்பித்ததும் இதுவரை காலமும் உத்தரவுப் பத்திரம் பெறுத நூற்றுக்கணக்கானோர் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுவருகின்றனர்.

மன்னார்மாவட்ட வானொலி, தொலைக்காட்சி பெட்டிகளின் உத்தரவுப்பத்திரப் பரிசோதகராக தொலைத்தொடர்பு திணைக்களத்தில் கடமையாற்றிய பேசாலையைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

---

### யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில

## 6-ம் தரப் பிரவேசப் பரீட்சை 1983

மேற்படி பரீட்சை 1982-11-20-ம் திகதி சனிக்கிழமை பின்வரும் பாடசாலைகளில் குறித்தொதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்திஞல் நடாத்தப்படும். விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்களிஞல் 1982-10-25-ம் திகதி வரை ஏற்கப்படும் மேலதிக விபரங்களுக்கு குறித்த அதிபர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

01. யாழ்ப்பாணப் இந்துக்கல்லூரி
02. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
03. கொக்குவில் இந்துக் கல்லூரி
04. யாழ்ப்பாணம மத்திய கல்லூரி
05. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி
06. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
07. தெல்லிப்பழை மகாஜஞக்கல்லூரி
08. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வித்தியாலயம்
09. பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி
10. பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் சல்லூரி
11. நெல்லியடி ம. ம. வி, கரவெட்டி
12. வசாவிளான் ம. ம. வி.

ம. சிமியாம்பிள்ளை,
யாழ் பிரதேச கல்வி அதிபதி.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1982-10-05. (4765)

---

# 'தமிழ் அரசியல் இயக்கங்களின் குரல்வளையை திருகும் முயற்சி'

## தமிழ் ஈழவிடுதலை அணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''எழுத்துரிமை பேச்சுரிமை கருத்துரிமை அனைத்தையும் வழங்கும் அறத்தின் சாவலனாக விளங்குபவர் இத்தீவின் குடியரசுத் தலைவர் என்று வர்ணிக்கப்படும் இத்தலைவரின் ஆட்சியில் முடியாட்சி மரபுக்கும், வரம்பிற்கும் உட்பட்ட முறையில் தமிழ் ஈழத்துக்கு வருகை தரும் ஸ்ரீலங்கா குடியரசுத்தலைவரின் வருகையை எதிர்த்து தக்க சான்றுகளோடு அறிக்கை வெளியிட்டு கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்ட ஈழப் பொதுமாணவர் மன்றச்செயலாளர் திரு. டேவிட்சன் அவர்களை ஸ்ரீலங்கா படையினர்சிறையில் அடைத்ததோடு சித்திரவதை செய்வதாகவும் எமக்குச்செய்தி கிடைத்துள்ளது.''

இவ்வாறு தமிழீழ விடுதலை அணி அமைப்புச்செயலாளர் திரு. ஈழவேந்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க முனையும் இவ் அரசு அந்தத் தமிழின அழிவைத்தடுக்கும் முறையில் குரல் எழுப்பும் தமிழ் அரசியல் இயக்கங்களின் குரல் வளையைத் திருகும் முயற்சி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் தமிழ் மக்கள் மேலும் வெறுப்புக் கொள்ளவே வழி செய்துள்ளது

மாணவர் இயக்கத்தலைவர் மு டேவிட்சனையும், குடியரசுத்தலைவர் வருகையை எதிர்த்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏனைய தமிழ் இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு தமிழ் ஈழவிடுதலை அணி கோரிக்கை விடுகிறது.

## ''பொறுமையும் கட்டுப்பாடும் விளையாட்டு மைதானம் தரும் பாடம்''

(இலுப்பைக்கடவை)

''தமது அணிக்கு வெற்றியைத் தேடித்தர முயற்சிக்கும் அதே நேரத்தில் எதிர் அணியினரின் வெற்றியை மதித்துப் பாராட்டும் மனப்பக்குவம் படைத்தவர்களாக விளையாட்டு வீரர்கள் விளங்கவேண்டும் பொறுமையோடு தமது குறைகளை ஏற்றுக்கொண்டு திறமையை வளர்க்க அவர்கள் முயற்சிப்பது அவசியமாகும்'' என்று கள்ளியடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகத்தினரின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கள்ளியடி அரசினர் தமிழ் வித்தியாலய அதிபர் திரு. பொன். ஐயாத்துரை சிவசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் திரு வி. தர்மலிங்கம் தலைமையில் நிகழ்ந்த பிரஸ்தாப கூட்டத்திற் தொடர்ந்து பேசிய அதிபர் ''எதிர் அணியினரைத் தோற்கடிப்பதற்காகக் கட்டுப்பாடுகளை மீறிய வழிவகைகளைக்கையாளுவது விளையாட்டு வீரர்களுக்கு அழகல்ல, தோல்வியைக்கண்டு துவண்டுவிடாமலும், வெற்றியைக் கண்டு எககளிப்புஎய்திவிடாமலும் இருக்க அவர்கள் பழகிக்கொள்ளுதல் வேண்டும். பொறுமையும், கட்டுப்பாடும் விளையாட்டு மைதானம் கற்றுத்தரும் பாடம் என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறக்கூடாது', என்ருர்.

நடப்புவருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திரு. வி தர்மலிங்கமும், செயலாளராக செல்வன் மா. மகேசுரனும், பொருளாளராக திரு. ஞானசேகரலிங்கமும் தெரிவு செய்யப்பட்டார்கள். [அ]

## இவ்வாசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

(கரவெட்டி)

கோப்பாய், உடுப்பிட்டி, பருத்திந்துறைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு இம்மாதம் 14,15ம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ க. ஈசுரபாதம் மேற்கொண்டு வருகின்ருர்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மாதகல் என்னுமிடத்தைச் சேர்ந்த காலம் சென்ற சின்னத்தம்பி இராமநாதன் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்களினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

வழ. இல: T/130

இராமநாதன் கைம்பெண் கமலாவதி, பாடசாலை ஒழுங்கை, மாதகல்.

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ம் திகதி முறபகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கக் கூடாது என்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1982ம் ஆண்டு ஆவணி மாதம் 26ந் திகதி நீதிமன்றக் கட்டளைப்படி.

சு. வ. கணேசன்,
பதிவாளர்.

தயாரித்தவர்
சோ. தேவராஜா,
மனுதாரின் சட்டத்தரணி. 4758

## தண்ணீர் அள்ளச்சென்ற யுவதி கிணற்றுக்குப் பலி!

(கரவெட்டி)

கிணற்றில் தண்ணீர் அள்ளச்சென்ற இளம்பெண் ஒருவர் தவறுதலாகக் கிணற்றில் விழுந்து மரணமானுர். இப் பரிதாப சம்பவம் கரணவாய் தெற்கு மணலாவளிஎன்னும் இடத்தில் நடந்துள்ளது.

தவம் ஜெயமணி (19வயது) என்ற இளம்பெண்ணேகிணற்றுக்குப் பலியானவராவார்.

இம் மரணவிசாரணையை மரணவிசாரணைஅதிகாரி திரு. பொ. குமாரசாமி மேற்கொண்டார்.

மரணவிசாரணையின் போது இறந்தவரின் தாயாரான தவம் தவமணி (43 வயது) சாட்சியமளிக்கையில், ''சம்பவதினம் இறந்த எனது மகள் குடிப்பதற்குத் தண்ணீர் அள்ளி வருவதாகக் கூறிச் சென்ருர். தண்ணீர் அள்ளச் சென்ற மகளை நெடுநேரமாக காணவில்லை என்று கிணற்றடிக்கு ஓடிச்சென்று பார்த்த போது மகள் கிணற்றுள் வீழ்ந்து கிடப்பதைக் கண்டேன். கிணற்றில் இருந்து மகளை வெளியே எடுத்து முதலுதவி செய்தபோதிலும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை. மகளின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை'' என்று தெரிவித்தார்.

இறந்தவரின் சகோதரன் தவம ஜெயராசா, சிறிய தகப்பனுரான பொன்னு பாலசிங்கம் கதிரன் அப்பையா ஆகியோரும் சாட்சியமளித்தனர் சாட்சிகளை கரணவாய் தெற்கு கிராமசேவையாளர் திரு சு. விஜயகுமார், பொலிஸ் கான்ஸ்டபிள் ரி. துரைராசா ஆகியோர் நெறிப்படுத்தினர்.

விசாரணைமுடிவில், கிணற்றில் தவறுதலாக விழுந்ததால் ஏற்பட்ட மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## கிணற்றடியில் வேடிக்கை பார்த்த பாலகன் துலாவுக்கு பரிதாபமாக பலி!

(மட்டுவில்)

கிணற்றில் நீர் இறைத்து அடியிலுள்ள சுரி அளளுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டு கிணற்றுக்கு அருகாமையில் நின்ற ஐந்துவயதுப் பாலகன் மீது கிணற்றுத்தலா முறிந்து வீழ்ந்து சிறுவனின் மண்டை பிளந்தது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பாலகன் ஆஸ்பத்திரியில் மரணமாஞன்.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. கணேஸ் ஜெராட் என்ற ஐந்து வயதுப்பாலகனே இப்பரிதாப மரணத்துக்குள்ளானவர்.

திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. கே. கேசவன் மரண விசாரணை நடாத்தி விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். யாழ். ஆஸ்பத்திரி சேவை பொலிஸ் திரு வடிவேலு சாட்சியை ஆஜர் செய்தார். (அ)

## மாணவர் சுற்றுலா

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை ஊறணி எமிலியானுஸ் கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை நேற்று முந்தினம் மேற்கொண்டுள்ளனர்.

அச்சுவேலி கைத்தொழில்

(7-ம் பக்கம் பார்க்க)

# "சோவியத் தொழில்நுட்பவளர்ச்சி அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்

## உலகநாடுகளுக்கு றீகன் எச்சரிக்கை

லண்டன் அக் 6

சோவியத் யூனியனுக்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்கவேண்டாமெனக் கோரிம் பிரசாரத்தை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

உலகநாடுகளைக் கேட்டுக் கொள்ளும் இப்பிரசாரத்தில் சோவியத் யூனியன் ஏனைய நாடுகளின் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்துவது அமெரிக்காவின் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றதென அமெரிக்கா அதிபர் திரு. றீகன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்தப் பிரசாரத்தில், சோவியத் யூனியன் ஏனைய நாடுகளிடமிருந்து இரகசியமாக விஞ்ஞான தொழில் நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளுகின்றதென்றும் இவ்வாறு பெறப்பட்ட தொழில் நுட்ப ஆலோசனைகளைக் கொண்டு வெவ்வேறு ரகங்களில் 150 இராணுவ ஆயுதங்களை சோவியத் யூனியன் தயாரித்து வைத்துள்ளதென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (கி)

## 'மீரட்' நகர் வழமைக்கு திரும்புகின்றது

புதுடில்லி அக் 6

உத்தரப் பிரதேசத்திலுள்ள 'மீரட்' என்ற இடத்தில் இந்து – முஸ்லீம் மதத்தவருக்கிடையே தோன்றிய மோதல்கள் தற்போது தணிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் கலவரங்கள் மேலும் நீடிக்காமலும் ஏனைய இடங்களுக்கு இது பரவாமலும் இருக்கும் பொருட்டு அதிகளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் இங்கு எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் ஓர் அம்சமாக மாஜிஸ்திரேட் நீதிபதியொருவர் இப்பிரதேசத்துக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

'மீரட்' பிரதேசத்தில் வசிப்போரிடமுள்ள அனுமதிப்பத்திரமில்லாத ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் இங்கு ஆயுதங்களை வெளியிடங்களிலிருந்து கொண்டு வரவும் தடைகள் போடப்பட்டுள்ளன.

மத்திய அரசின் அமைச்சரான திரு. பி. டி. சேதி 'மீரட், மக்களிடம் பூரண அமைதியைப் பேணுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (கி)

## அமெரிக்காவில் 'ஜீப்'ஓட்ட விரும்பும் வியட்னாமிய சிறுவன்!

லொஸ்ஏஞ்சல்ஸ், அக். 6

''எனது தந்தையார் வியட்னாமில் ஜீப் வண்டி ஒட்டியது போலவே நானும் இங்கு ஜீப் வண்டி ஒட்டவிரும்புகிறேன்'' என்று அமெரிக்காவுக்கு புது வாழ்வு தேடிவந்துள்ள வியட்னாமியச் சிறுவனொருவன் பத்திரிகையாளரொருவரிடம் தெரிவித்தான்.

இந்தச் சிறுவன் வியட்னாம் போரின்போது 1975ம் ஆண்டுக்கு முன்னர் அங்கு நிலைகொண்டிருந்த அமெரிக்க போர்வீரர்களுக்கும் வியட்னாமியப் பெண்களுக்கும் பிறந்த குழந்தைகளில் ஒருவனாவான்.

அமெரிக்க அரசு இவ்வாறு வியட்னாமில் பிறந்த குழந்தைகளுக்கு அமெரிக்காவில் புது வாழ்வைஏற்படுத்திக்கொள்ள விரும்பம் தெரிவித்ததையடுத்து ஏழு சிறுமிகளும் நான்கு சிறுவர்களுமாக பதினொரு வியட்னாமிய பிள்ளைகள் அமெரிக்கா வந்துள்ளனர்.

கடந்தவாரம் வியட்னாமில் இருந்து நான்கு நாள் விமானப்பயணத்தின் பின்னர் லொஸ்ஏஞ்சல்ஸ் வந்தடைந்த இந்தப் பிள்ளைகளை பத்திரிகையாளர்களும், படப்பிடிப்பாளர்களும் விமானநிலையத்தில் முற்றுகையிட்டிருந்தனர்.

இந்தப் பிள்ளைகளைப் போன்றே அமெரிக்க வீரர்களுக்குப் பிறந்த எண்ணாயிரம்முதல் பத்தாயிரம்வரையான குழந்தைகள் தற்போது வியட்னாமில் இருக்கின்றனரென்றும் ஆனால் இவர்களை எவரும் தமது குழந்தைகள் என உரிமை பாராட்டாததினால் அமெரிக்கா வர இவர்களை அனுமதிப்பதில் சிக்கல்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## மன்னார் செய்திகள்

### புதிய பஸ்சேவை

[மன்னார்]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையினால் தலைமன்னாரிலிருந்து முல்லைத்தீவிற்கு புதிய பஸ் சேவையொன்று விரைவில ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் புதிய பஸ்சேவை தலைமன்னாரிலிருந்து மன்னார், வவனியா புளியங்குளம், நெடுங்கேணி வழியாக முல்லைத்தீவிற்குநடைபெறும்.

இந்த புதிய பஸ்சேவை தலைமன்னாரிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்பட்டு 12 மணிக்கு முல்லைததீவை சென்றடையும். பகல் 12–30 மணிக்கு முல்லைத் தீவிலிருந்து புறப்படும் இப் பஸ் சேவை மாலை 6–30 மணிக்கு தலைமன்னார் வந்தடையும்.

இப் புதியபஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான நடிவடிக்கைகளை மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் மேற்கொண்டிருந்தார்,

### பத்துப் புதிய பஸ்கள்

மன்னார் மாவட்ட மக்களின் போக்கு வரத்து நலன்கருதி மன்னார் சாலைக்கு பத்து புதிய பஸ் வண்டிகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

இதற்கு முன்னோடியாக தற்போது 4 புதிய பஸ் வண்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மிகுதி 6 புதிய பஸ் வண்டிகளும் இம்மாதம் நடுப்பகுதியில் அனுப்பிவைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### குடிநீர் விநியோகம்

கொடிய வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மன்னார் உப்புக்குளம் பகுதி மக்களுக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

உப்புக்குளம் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதையடுத்து மன்னார் கிழக்கு கிராமோதயசபை தலைவர் ஜனாப் இக்பால் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக பவுசர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

7ம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் எர்ஷாத் இந்தியா விஜயம்!

புதுடில்லி ஆக. 6

பங்களாதேஷ் இராணுவ ஆட்சியாளரான லெப்டினன்ட் ஜெனரல் மொஹமட் எர்ஷாத் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுவளார்.

இங்கு இவர் பிரதமர் இந்திரா காந்தி, உப ஜனாதிபதி ஹிதாயத் தொல்லா ஆகியோரைச் சந்தித்து உரையாடுவார்.

பங்களாதேஷின் ஜனாதிபதியான பின்னர் இந்தியாவுக்கு ஜெனரல் எர்ஷாத்மேற்கொள்ளும் முதலாவது உத்தியோக பயணம் இதுவாகும்.

இந்திய–பங்களாதேஷ் எல்லைகள் குறித்தும், கங்கைநீர்ப் பங்கீடு குறித்தும், சர்வதேச நிலைமைகள் பற்றியும் ஜெனரல் எர்ஷாத் இந்தியாவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## புதுடில்லியில் அடுத்தஆண்டு அணிசேரா மகாநாடு!

### இயக்கப் பிரதிநிதிகள் பூரண ஆதரவு

லண்டன், அக். 6

அணிசேரா இயக்கத்தின் ஏழாவது உச்சி மகாநாடு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதலாந்திகதியிலிந்து பதினோராம் திகதிவரை புதுடில்லியில் நடைபெறவிருக்கின்றது.

இதற்கான முழுச் சம்மதத்தையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகள் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்தஇரண்டு தினங்களாக நடைபெற்ற ஐ. நா, வில் அங்கம் வகிக்கும் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையிலான மாநாட்டையடுத்தே இந்திய வெளிநாட்டமைச்சரிடம் புதுடில்லியில் ஏழாவது உச்சமாநாட்டை நடத்துவதற்கான தமதுவிருப்பத்தை சகல பிரதிநிதிகளும் ஏகமனதாக தெரிவித்தனர்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் அணிசேரா மகாநாட்டினை நடத்துவது குறித்து வழங்கிய விளக்கத்துக்கும் இயக்கப்பிரதிநிதிகள் பாராட்டு வழங்கினர்.

இந்த ஏழாவது அணிசேரா உச்சிமாநாடு ஈராக்கின் தலைநகரான பாக்தாத்திலேயே நடைபெறுவதாக விருந்ததும் பின்னர் வளைகுடாயுத்தம்காரணமாக மாநாடு அங்குநடைபெறுவதையிட்டு ஈரான் நாடு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து புதுடில்லிக்கு இம்மகாநாடு மாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [கி]

## விமானச்சிப்பந்திகளுக்கு விசேட கௌரவம்!

புதுடில்லி. அக் 6

இந்திய விமானச் சேவை கடத்தல் நாடகங்களுக்குள்ளான அதன் விமானங்களில் பணியாற்றிய சிப்பந்திகளுக்கு விசேட கௌரவங்களை வழங்கியுள்ளது.

இக்கௌரவங்களை பன்னிரண்டு விமானச்சிப்பந்திகள் இந்திய விமானச்சேவையின் தலைவரான திரு. பில்லிமோரியாவிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு விசேட விருதுகளுடன், விரும்பிய நாடுகளுக்குப் போய்வர இலவச இருவழிப்பயண விமானச்சீட்டுகளும், பத்துநாள் விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சிப்பந்திகள் கடந்த மாதம் பதினைந்து நாட்களில் அடுத்தடுத்து நடைபெற்ற விமானக் கடத்தல் சம்பவங்களுக்கு முகங்கொடுத்தார்களென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஐ. நா. வின் போர்நிறுத்தக்கோரிக்கையை ஈரான் நிராகரித்தது!

### 2500 பேரைக் கொன்றுள்ளதாக ஈராக் அறிவிப்பு!

தெஹ்ரான் அக் 6

வளைகுடாயுத்தத்தை நிறுத்தும்படி ஐ. நா, ஸ்தாபனம் விடுத்த கோரிக்கையை ஈரான் நிராகரித்துள்ளது.

இந்த நிராகரிப்புக் குறித்து ஈரான் வெளியிட்டுள்ள விளக்கத்தில் ஈராக் தம்மிடமிருந்து கைப்பற்றியுள்ள பிரதேசத்தை மீட்டுக்கொள்ளவே தாம் தொடர்ந்து போரிடுவதாகவும் ஈராக்கின் ஆக்கிரமிப்புக்குறித்து ஐ. நா. விடம் முறையிட்டதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென்றும் எனவே அதன் போர் நிறுத்தக்கோரிக்கையைத்தாம் நிராகரிப்பதுடன் அதன் கூட்டங்களிலும் பங்கு பற்றப்போவதில்லையெனறு ஈரான் அறிவித்துள்ளது.

இதேவேளை பாக்தாத்திலிருந்தும் 70 மைல்கள் தொலைவிலுள்ள மண்டாலிங் என்ற இடத்தில் நடைபெற்ற சண்டையில் 2500 ஈரானியப்போர் வீரர்களைத் தாம் கொன்றுள்ளதாகவும் பலரைச் சிறைப்பிடித்திருப்பதாகவும் ஈராக் அறிவித்துள்ளது. (கி)

"எதிர்காலச் சந்ததியினருக்காக

## திட்டமிட்ட குடும்பவாழ்வைக் கடைப்பிடிக்கவேண்டும்"

(இலுப்பைக்கடவை)

''நமக்கு உரிமையான நிலம் வரையறுக்கப் பட்டுள்ளது. மூலவளங்களுங்கூட வரையறுக்கப்பட்டவைகள் தான். நாம் வாழும் இந்த நிலத்திலேயே நம் எதிர்காலச் சந்ததியினரும் வாழ்ந்தாக வேண்டும். நாம் அனுபவித்து எஞ்சியவைகளையே அவர்களும் அனுபவிக்கக் காத்திருக்கிறார்கள். நிலத்தைச் சுருக்கி வளங்களைப் பற்றாக் குறைகளாக்கிவிட்டு நாம் சென்றுவிட்டால் அவர்கள் வாழ்வு இருளடைந்ததாகிவிடும் எதிர்கால சந்ததியினரின் நலன் கருதியாவது திட்டமிட்ட குடும்ப வாழ்க்கைமுறையை நாம் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும்''

இலுப்பைக்கடவைக் கிராமோதய சபையின் 5வது தொடர்க்கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய அதன் தலைவர் திரு சி. சண்முகலிங்கம் திட்டமிட்ட குடும்ப வாழ்வு பற்றிக் குறிப்பிட்டு பேசும் பொழுது மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்து பேசிய அவர் ''வாழ்க்கைச்செலவு மிகமோசமாக அதிகரித்துவிட்டது, உணவுப் பற்றாக்குறை, போஷாக்கின்மை பாரதூரமான பிரச்சினைகளாகி வருகின்றன படித்த வாலிபர்கள் வேலையில்

[7–ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

மனிதனின் அருமந்த சொத்து அவனது வாழ்க்கையாகும். எனவே அவன் தான் சாகும்பொழுது ''எனது முழு வாழ்வும் சக்தியும் உலகின் முதல் தேவையான மனித இனத்தின் விடுதலைக்காகவே பயன்பட்டது'' எனச்சொல்லக்கூடியதாக அந்த வாழ்க்கை அமைய வேண்டும்.

— லெனின்

# நமது நோக்கு

## ஸ்பானிய சோஷலிசம்

ஸ்பெயின் சுமார் 40 வருடம் ஜெனரல் பிரான்கோவின் தனிஆட்சி கண்ட நாடு.

1936–1939 காலத்தில் நடந்த கோரமான உள்நாட்டுப்போரில் குடியரசுவாதிகள் தோல்வியடைந்ததும் பிரான்கோவின் சர்வாதிகார ஆட்சி அவர் இறக்கும் வரைக்கும் நிலைத்திருந்தது.

இரண்டாவது உலகமகா யுத்தத்தில் ஹிட்லர், முசோலினி போன்ற சர்வாதிகாரிகளையும் ஜப்பானிய ராணுவ பாசிசமையும் (Fascism) எதிர்த்த பிரிட்டனும், பிரான்சும், ஸ்பெயினின் குடியாட்சியினருக்கு எவ்வித உதவியும் அளிக்கவில்லை. பிரான்கோவின் வெற்றியை ரகசியமாக சுவைத்தன. விபரீதமான போக்கு.

குடியாட்சிலட்சியத்துக்கு ஆதரவாக இலங்கையின் பிலிப் குணவர்த்தனவும், இந்தியாவின் சோஷலிசத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணும் ஸ்பானிய யுத்தத்தில் பங்கு பற்றியதை நாம் பெருமையுடன் இங்கு குறிப்பிடவேண்டும்.

இன்னும் மூன்று வாரத்தில் நடக்கவிருக்கும் ஸ்பானிய பொதுத் தேர்தலில் சோஷலிச கட்சி வெற்றி பெறும் சாத்தியமிருக்கிறதாகக் கூறப்படுகிறது.

48 வருடம் 'பிரான்கோயிசம்' (Francosim அனுபவித்த ஸ்பெயினில்சோஷலிசம் தலைகாட்டுவதானால் அது ஒரு புரட்சிகரமான பாற்றமென்று கருதப்படுவது இயல்பு.

ஐரோப்பாவில்–சிறப்பாக மேற்கு ஐரோப்பாவில் சோஷலிசம் என்றால் ரஷ்ய கம்மியுனிசத்தின் நண்பன் என்ற கருத்தும், ஒருவித சந்தேகமும் இருக்கின்றன.

அவ்வாறிருந்தும், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற அபிவிருத்தியடைந்த பொருளாதார வளம் பெற்ற நாடுகளில் சோஷலிச கொள்கை ஆட்சிபீடத்தில் காணப்படுவது அதிசயமல்ல; இருப்பினும் தீவிரவாத சோஷலிசம் இந்த நாடுகளில் வேரூன்றுவது இன்னும் சாத்தியமாகவில்லை.

ஸ்பானிய சோஷலிசம் பிரான்ஸ் ஜனாதிபதிமிற்றெரான்டின் சோஷலிசமளவுக்குப் பலமானதல்ல; சென்ற கிழமை தோல்வியடைந்த மேற்கு ஜெர்மன் அதிபர் ஸ்மித்தின் சோஷலிச ஜனநாயகக்கட்சியின் கொள்கைக்கு சமமானதாகக் கருதலாம்.

இவ்வித மிருதுவான கொள்கைக்கே, பொதுமக்கள் ஆதரவு அதிகரித்து வந்தபோதும், பிற்போக்குவாதிகள் தங்கள் செல்வாக்கினால் அதன் வெற்றியைத் தடுத்து நிறுத்தத்திட்டமிடுவது உலகெனத்திலும் உருவெடுக்கும் இன்றைய செல்வந்த ஆட்சியின் பொதுக்குணமாகும்.

சென்ற வருடம் ஸ்பெயினில் நடத்தத்திட்டமிட்ட ஒரு ராணுவசதி முறியடிக்கப்பட்டு அதன் தலைவரான ராணுவ அதிபதி 30 வருட சிறைக்கு அனுப்பப்பட்டார்.

இவ்வாரம் இன்னொரு பெரும் ராணுவ சதித்திட்டம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் செய்தி கூறுகின்றது.

ஜனநாயக ஆட்சிக்கு ஆவல் கொள்ளும் ஸ்பெயினில் மக்கள் விருப்பை முறியடிக்கவும், பிரபுத்துவ வகுப்பினர் செல்வாக்கைப் பாதுகாக்கவும் ராணுவசதிகள் தலையெடுப்பதுவும், சில வேளைகளில் வெற்றியடைவதும் இன்றைய உலக வரலாற்றில் இடம் பெறும் நிகழ்ச்சிகள்.

அதிகாரத்திலிருந்தவர்கள் அதனைக் கைவிடமாட்டாத நிலை மக்கள்தீர்ப்புக்கு மாறானதானால் அது ஜனநாயகமல்ல; சோஷலிசம் என்ற சொல்லைக் கேட்டே அருவருப்புக் கொள்கின்றவர்கள், மக்கள் அதனைப் புரிந்து ஆதரவு காட்டும் கட்டத்திலும் அதனை முறியடிக்கப்பின்னில்லாரென்பதை இன்றைய ஸ்பானிய பொதுத்தேர்தல் முன்கூட்டியே கற்பிக்கின்றது.

# "தேர்தல் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவோம்"

## கம்யூ. இடதுகட்சி அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''எமது நாட்டு மக்களை எதிர்நோக்குகின்ற உடனடிக் கடமை தற்போதைய யூ.என்.பி. அரசாங்கத்தைத் தோற்கடிப்பதேயாகும். இக்கடமையை நிறைவேற்ற ஜனாதிபதித் தேர்தல் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதால் மக்கள் இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி யூ.என்.பிக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.''

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தேசிய அமைப்புக் கமிட்டி சார்பாக அதன் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கை கூறுவதாவது, தற்போதைய நிலைமைகளில் யூ. என். பியைத் தோற்கடிக்கக்கூடிய வல்லமை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கே உண்டு ஆதலால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பிரதான எதிர் வேட்பாளரான திரு ஹெக்டர் கொப்பேகடுவாவை ஆதரிப்பதென முடிவு செய்துள்ளது.

தேர்தலிலிருந்து ஒதுங்கியிருப்பதோ அன்றி பகிஷ்கரிப்பதே யதார்த்த நிலையில் யூ.என்.பியை அதிகாரத்தில் நிலைகொள்ளச் செய்வதற்கு உதவி வழங்குவதாகவே அமையும் என எமது கட்சி கருதுகின்றது. எனவே பொது எதிரியான யூ என் பியைத் தோற்கடித்து அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கு சகல மக்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான கொப்பேகடுவாவுக்கு வாக்களிக்க வேண்டும் என எமது கட்சி வேண்டுகோள் விடுக்கின்றது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வரப்பெற்றோம்

''லக்'' என்ற சேதிட மாத இதழின் ஆண்டுமலர் வரப்பெற்றோம்.

இதில் சோதிடக் குறிப்புகளும் ரேகை சாஸ்திரம் பற்றிய குறிப்புகளும் போதியளவு இருக்கின்றன. சனிமாற்றத்தின் பலாபலன்கள் இராசி ரீதியிலும், மாதபலன் எண் ரீதியிலும் உள்ளது. சனிமாற்றத்தையிட்டு சனிக்கிரகத்தையும் சனிக்கிரக சாந்தியைப்பற்றியும் உள்ள குறிப்புக்கள் வாசகர்களின் சிந்தனையும் செயற்பாட்டையும் தூண்டுவதாய் உள்ளது. நாமமாற்றம் என்ற பகுதிஎண்சோதிடத்தில் அக்கறை கொள்பவருக்கு ஊக்க மூட்டுகிறது.

ஆசிரியர் சிதம்பரநாதன் கண்ணனிடம் ஈடுபாடுடையவர் என்பது மலரில் காணக்கூடியதாயுள்ளது. மலரின் முன் அட்டையின் அமைப்பே இது ஒரு சிறந்த மலர் என்பதைப் பகிரங்கப் படுத்துகின்றது. இதன் விலை 5 ரூபாய்.

[ப]

## சமயகுரவர்களைப் பின்பற்றி நாம் செய்வது தவறு?

தேவாம் திருவாசகம் பாடிய அருளாளர்களான சமயக்குரவரே இறந்தபின் உடலைப் புனித இடமாகிய கோவிலுக்குக் கொண்டு சென்று அங்கே வைத்து இறைவனின் மேல் திருப்பாக்களைப் பாடி அவன் அருளைப் பெற்று இறந்தவரையே உயிர்பெறச் செய்திருக்க அவர்களின் நெறியைப் பின்பற்றும் நாம் செய்வது தவறு? அப்பர் செய்கை அறியாமையாகுமா? அப்படி அப்பர் செய்திருந்தால் இறைவன் அவருக்கு அருள்பாலித்திருப்பானா? சம்பந்தர் செய்கையும் அறியாமையா?

இறந்தவனின் உடலை அதுவும் புனித இடமான இறைவனின் தலத்திலேயே வைத்துத்தேவாரம் பாடி அவனருளால் உயிர்பெறச்செய்திருப்பதை நாம் யாவரும் தெட்டத்தெளிவாக அறிந்து கொண்டும் இவ்விவாதத்தை நீட்டவேண்டிய அவசியம் இல்லை. பேராசிரியர் அவர்களும் பலரின் அபிப்பிராயங்களை அறிந்துகொண்டு நடைமுறையில் இருந்துவரும் மரணவீட்டில் தேவார திருவாசகம் ஓதும் வழக்கத்தை ஏற்றுக்கொள்வார் என்பதே சிறியேனின் அபிப்பிராயமாகும்.

''கண்டா ஊக்
கவிராயர் சி. கு.

## ஜனாதிபதி தேர்தலும் தேசிய வாக்குரிமையும்

1977ம் ஆண்டு ஐக்கியதேசியக் கட்சி பதவியேற்றபோது தனிச் சிங்களச்சட்டம், சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் அரசாட்சி, வெளிநாடுகளுக்குப் போகமுடியாமை, இன்னும்பல இன்னல்களுடன் மேற் குறிப்பிட்ட முக்கிய கஷ்டங்கள் இருந்தன.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசு பதவிக்கு வந்தவுடன், அரசியல் சாசனத்தில் தமிழுக்கு தேசிய அந்தஸ்து, தெரிவுசெய்யப்பட்ட எம். பிக்களின்மூலம் ஆட்சி, வெளிநாட்டுக்கு போகவும் அங்கே வேலை செய்யவும்வசதி.

இது மாத்திரமன்றி சிறுபான்மை மக்களின் இறைமை விசேடமாகவும் இலங்கை மக்களின் இறைமை பொதுவாகவும் பெலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சோல்பரி அரசியல் சாசனம் தொடக்கம் சிறீமா அரசியல் சாசனம் வரைக்கும் ஒருதொகுதியினால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரே, பிரதமராகி, இலங்கையின் தலைவராக இருந்து வந்தார். இப்படித் தெரிவு செய்யப்பட்ட பிரதமரைத் தெரிவதில், மற்றைய தொகுதி மக்களுக்கோ, சிறுபான்மையினருக்கோ உரிமையில்லை. ஆனால் இன்றும் இவர்களது இறைமையும் உரிமையும் மிகவும் உயர்ந்துவிட்டது. பொதுமக்களின் உரிமையை உயர்த்திய பெருமை ஜே. ஆரையே சாரும் தேசத்தின் தலைவரைத் தெரிவு செய்யும் இவ்வுரிமையை நாங்கள் பாவித்து சிறந்த தலைவரைத் தெரிய வேண்டும்.

அடுத்து மிகவும் முக்கிய முன்னேற்றம் மாவட்ட சபைகளின் அங்குரார்ப்பணம். பல மொழிகள் பல அபிலாசைகள் உள்ள நாடுகளுக்குச் சிறந்த அரசு சமஷ்டி அரசாகும். இதை காலஞ்சென்ற தலைவர் திரு செல்வநாயகம் திரும்பச் சொல்லியிருக்கிறார். இப்பெருந் தலைவருடன் இராப்பகலாக உழைத்த இன்றைய தமிழ்த் தலைவர் திரு. அமிர்தலிங்கமும் ஒருகாலத்தில் ஏற்றவர். இன்று ஈழம் கேட்கின்ற போதும் அன்று, சமஷ்டிக் கட்சி சமஷ்டியைக் கேட்டது. மாவட்டசபைகள் சமஷ்டிக்குச் சமமானவை என்று சொல்ல முடியாவிட்டாலும், அவை சமஷ்டியை நோக்கிச் செல்லும் பாதை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# மக்கள் கருத்து

1970–1977ம் ஆண்டில் பதவியிலிருந்த அரசு சுற்றுநிருபங்களில்கூட தமிழுக்கு அந்தஸ்த்து கொடுக்கத் தயங்கியது. தமிழ் அரசாங்க ஊழியர்கள், சிங்களத் தகுதியின்றி, சேவையில் முன்னேறமுடியவில்லை. இன்று, சிங்களத்தில் ஒரு தேர்ச்சியுமின்றிப் பல தமிழர்கள் சேவை முன்னேற்றம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் பழைய புகுவாளர்களாவார்கள் புதியவர்களும், மாவட்ட சபைகள் பலத்து வளரும் நேரத்தில் தமிழ் பிராந்தியங்களில் சேவைசெய்தால் சேவை முன்னேற்றத்தைக் காண்பார்கள்.

நாடற்ற மக்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும சில வருடங்கள் ஜே. ஆர். பதவியிருந்தால் நாடற்றவர்கள் பிரஜைகளாகிவிடுவார்கள். இன்று அவர்களுக்கு அரசியல் சாசனத்தின் ஷரத்து 14(1) ன் கீழ் பிரஜைகளுக்குள்ள உரிமைகள் பல வழங்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவுச்சங்கள், கி. மு. சங்கங்கள் சனசமூகநிலையங்களில் அங்கத்துவம்; அரசாங்கக் காணிகளில்குத்தகைக்கிருக்கும் உரிமை, கூ. சங்கம், கி. மு. சங்கம், ச. ச. நிலையங்களுக்கு ஊடாக பிரதேசசபை

(8–ம் பக்கம் பார்க்க)

## மாதோட்ட நன்னகர்

சம்பந்த சுவாமிகளும் சுந்தரமூர்த்திநாயனாரும் பாடிய மாதோட்ட 'நன்னகரும்' பாலாவியின்கரை மேல்எழுந்தருளியிருக்கின்ற ''செத்தாரெலும் பணிவான்' கோவிலும் மீண்டும் அந்த நிலைக்கு வருவது தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதன.

இதற்கு முக்கியமான மகாதேவா தாம்போதியை யாழ். அபிவிருத்திச்சபை பொறுப்பேற்று நிறைவேற்றுமென நம்ப இடமுண்டு.

''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த'' கோணமாமலையும் திருக்கேதீஸ்வரமும் தமிழ்மக்களின் – சைவர்களின் மட்டுமல்ல – இரு கண்கள்; எந்த சமயத்தவரும் வழிபாடு செய்யவும் அந்த நகரங்களில் மேன்மைக்குழைக்கவும் உரித்துடையவர்களென்பது வரலாறு உறுதிப்படுத்தும் உண்மை.

திருக்கேதீஸ்வரம் என்ற ''தேன்பொந்தை'' கைவிடாதீர்களென்று ஆறுமுகநாவலர் திருவாய்மலர சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் கோயில் அமைத்து அதன் புனருத்தாரண சபையின் முதற் தலைவராக இருந்து தம்முடைய மலாயா மாணவர்களைக் கொண்ட ஒருகிளைச் சபையை உருவாக்கினார்.

அந்தக்கிளைச்சபை இன்று 4 லட்சம் ரூபாயில் இரு மண்டபங்களைக் கட்டியிருக்கிறது. என்னே மலேஷியாவின் சைவப் பணி!

திருக்கேதீஸ்வர ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும்இவ்விருமண்டபங்களும் இவ்வாலயத்தின் பிரதம கர்த்தாக்களான சைவப் பெரியார் சிவபாத சுந்தரத்தினதும் அவர் பின் கோவிலுக்கும் மாதோட்ட நன்னகரின் புனரமைப்புக்கும் தம்மை அர்ப்பணித்த சிவமணி. சேர். கந்தையா வைத்தியநாதனினதும் பெயர்களைக் கொண்டிருக்கின்றன.

இது எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தம். இம் மண்டபங்களை சைவ அறிஞர் மு. ஞானப்பிரகாசமும் திருப்பணிச் சபைத்தலைவர் இ. நமசிவாயமும் திறந்து வைத்த வைபவம்.

மலேசிய கிளை இயற்றிய அபாரமான சாதனைகளுக்குப்பெரும் பொறுப்பு வகிக்கும்கிளைத்தலைவர் திரு ஆ. தம்பையாவும் மேலே குறிப்பிட்டிருக்கும் இருபெரியார்களும் சைவப்பெரியார் சிவபாத சுந்தரனாரின் பேரபிமானிகள். குருபக்தியின் மேன்மை, தெய்வ பக்திக்கு முதன்மையான ஆலயதொண்டில் பரிணமிக்கின்றது பாராட்டுக்குரிய பெருவிடயம்.

மாதோட்ட நாகரிகம் மீண்டும் பிறக்க அபிவிருத்தி தொடரட்டும்.

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# "ஜே. ஆர். கூறும் 31 லட்சத்தில் 12 எங்களை இப்போது ஆதரிக்கின்றனர்!"

## மன்னாரில் ஹெக்டர் கொப்பேகடுவ

(மன்னார்)

''இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளில் பெரும்பான்மையான அரசியல்கட்சிகளின் பொதுவேட்பாளனாக நான் ஜனாதிபதி தேர்தலில் நியமிக்கப்பட்டுள்ளேன். ஐ. தே. கட்சியின் பெருந்தொகையான ஆதரவாளர்கள் ஆதரவுதிரட்டிவருகின்றனர்''

இவ்வாறு மன்னார் பொது நூலகத்திற்கு முன்பாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய சிறிலங்காசுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மன்னார் அமைப்பாளர் ஜனாப் எம். என். ஐயூப் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திரு. கே. இரத்னாயக்கா, கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர் ஜனாப் அபுயூசுப், அமைப்பாளர் டொக்டர் றெபேட் குரூஸ் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இத் தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தமது உரையில் கூறியதாவது:

''77ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமது கட்சிக்கு 31 லட்சம் வாக்குகள் கிடைத்ததாக ஜே.ஆர். ஜயவர்த்தன கூறுகிறார். இதில் 12 லட்சம் வாக்காளர்கள் இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியையே ஆதரிக்கின்றனர்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி 70ம் ஆண்டு ஐக்கியதேசிய கட்சியிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியபோது 'கஜானா' காலியாக இருந்தது. உலக நாடுகளில் பெருந்தொகையான கடன்கள் இருந்தன.

அப்போது நிதிமந்திரியாக இருந்த அமரர் என். எம். பெரேரா உலகவங்கியிடம் கடன்பெறச் சென்றபோது உலகவங்கியில் ஏற்கனவே கடனிருந்ததால் இலங்கைப் பணத்தின் பெறுமதியை குறைக்கவேண்டுமென்றும், இலங்கையில் வழங்கப்படும் மானியங்கள் நிறுத்தப்பட வேண்டுமென்றும், போக்குவரத்துக்கட்டணத்தை அதிகரிக்கவேண்டுமென்றும் உலக வங்கி கேட்டுக்கொண்டது.

இவற்றைச் செய்தால்தான் கடன்வழங்கமுடியும் என்றும் தெரிவித்தது.

இதற்கு எமது ஆட்சி ஒத்துக்கொள்ளவில்லை. அப்படி ஒத்துக் கொண்டிருந்தால் பெருந்தொகையான பணம் எமக்கு கடனாகக் கிடைத்திருக்கும்.

இன்றைய நிதிமந்திரி பணத்தின் பெறுமதியைக் குறைக்கவும், மானியங்களை நிறுத்தவும், போக்குவரத்துக்கட்டணங்களை உயர்த்தவும் சம்மதம்தெரிவித்ததால்உலகவங்கி பெருந்தொகையான பணத்தைக் கடனாகக் கொடுக்கின்றது.

இதனால் பொருட்களின் விலை மலைபோல் உயர்ந்தது; பணவீக்கம் ஏற்பட்டது. மக்களுக்கு வழங்கப்பட்ட பல மானியங்கள் நிறுத்தப்பட்டன. 70ம் ஆண்டுமுதல் 77ஆம் ஆண்டுவரை அத்தியாவசிய உணவுப்பொருட்களை எமது அரசு கூடிய விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு மக்களுக்கு வழங்கியது.

விவசாயிகளுக்கு வேண்டிய உரவகைகளைக்கூட கூடிய விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விவசாயிகளுக்குவழங்கினோம். வெளிநாட்டுச்செலாவணியைப் பெறுவதற்காக சுயமுயற்சிகளை ஸ்ரீ ல.சு.கட்சி அரசு மேற்கொண்டது. மக்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட பொருட்களை அதிக விலைகொடுத்து வாங்கினோம். எமது நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வெளிநாட்டு இறக்குமதிகளைக் குறைத்தோம், இதனால் மிளகாய், வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தி கூடியது.

உற்பத்திக்கேற்ற விலையும் எமது ஆட்சியிலே கிடைத்தது. எமது ஆட்சிக்காலத்தில்தான் ஒரு இருத்தல் மிளகாய் 40 ரூபாவாக விற்பனை செய்து விவசாயிகள் மகிழ்ந்தார்கள்.

எமது ஆட்சிக்காலத்தில 1 லட்சத்து 10ஆயிரம் ஏக்கரில் மிளகாய் செய்கை மேற்கொள்ளப்பட்டது எமது ஆட்சிக்காலத்தில்தான் 70 லட்சம் ஏக்கர் காணியில் உப உணவு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இன்று உபஉணவு உற்பத்தி குறைந்துள்ளது. இன்று 6 ஆயிரம் ஏக்கர் காணியிலேயே மிளகாய் செய்கை பண்ணப்படுகிறது.

எமதுஆட்சிக்காலத்திலேயே 12 ரூபாவாக விருந்த நெல்லின் விலையை 31ரூபாவாக உயர்த்தினோம் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கு ஊக்கமளித்தோம்.

இன்றைய அரசு உற்பத்

(8ம் பக்கம் பார்க்க)

## 8, 9, 10-ம் திகதிகளில் றெட்றிக்கோ மைதானத்தில் குமார், கொல்வின், ஹெக்டர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்று அபேட்சகர்களின் பிரசாரக்கூட்டங்கள் மூன்று தினங்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இம்மாதம் 8-ந் திகதி மாலை தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு குமர் பொன்னம்பலமும், 9-ந் திகதி லங்கா சமசமாஜக்கட்சி அபேட்சகர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வாவும், 10-ம் திகதி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. கொப்பேகடுவவும் உரை நிகழ்த்தவுள்ளனர். (மா)

## நாளைநடக்கும் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய ஆர்வலர்கள் நடத்தும் பாரதிபற்றிய நவீன ஆய்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும். இவ்வாய்வரங்கில் எஸ் சிவலிங்கராசா சு. வரதராசன். செ. கணேசலிங்கன் ஆகியோர் பேசுவர். இறுதியில் கலந்துரையாடல் நடைபெறும். கணபதி கணேசன் வரவேற்புரை நிகழ்த்துவர். [அ]

## பாரதி நூற்றாண்டு இன்று 9 வது கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாரதி நூற்றாண்டை முன்னிட்டு நடைபெறும் 9வது ஆய்வரங்கு யாழ் றிம்மர் மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறுகிறது.

பேராசிரியர் க கைலாசபதி தலைமையில் நிகளும் இந்நிகழ்ச்சியில் திரு சி மௌனகுரு ஆய்வுரை நிகழ்த்துவார்.

# "தமிழ் மக்களிடம் ஆதரவுகோர ஐ.தே.கவுக்கு உரிமை இல்லை"

(யாழ்ப்பாணம்)

''பண்டா–செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்குப் பாதயாத்திரை செய்தவரும் 1977ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது சண்டையா? அல்லது சமாதானமா? என்று சவால்விட்டவருமே இன்று ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்றார். இவர் தமிழ்மக்கள்மத்தியில் ஆதரவு கோர எதுவித உரிமையும் அற்றவர்''.

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சி ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரான டாக்டர் கொல்வின் ஆர். டி.சில்வாவை ஆதரித்து கோப்பாயில் நடந்த அக்கட்சியின் அதிகார மளிக்கப்பட்ட மாவட்ட முகவர் கருத்தரங்கில் திரு, எம். வி. நடராசா குறிப்பிட்டார். தொடர்ந்து அவர்பேசுகையில் கூறியதாவது; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனித்து ஆட்சி நடத்திய போது சிறுபான்மையினருக்கோ பொதுவாகநாட்டு மக்களுக்கோ பயனளிக்கும் திட்டங்களை அமுல் நடத்தவில்லை. இலங்கை சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டாக 1970ம் ஆண்டு அரசாங்கம் அமைத்த பின்புதான் விவசாயிகளுக்கும் சாதாரண மக்களுக்கும் நிலமற்றவர்களுக்கும் நன்மை பயக்கும் முற்போக்குத் திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டன

தோழர் என். எம் பெரேரா நிதிஅமைச்சராக இருந்த பொழுது பல ஆண்டுகாலம் சுரண்டப்பட்டு வந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர விமோசனம் அளிக்கும் கூட்டுறவு தவறணை முறையை அமுல் நடத்தினர். இதனால் இவரை தென்னிலங்கையில் கள்ளுக்காரப் பேரேரா என்று யூ. என். பி பிரமுகர்கள் எள்ளிநகையாடினர்கள்

தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா பெருந்தோட்டத் தொழில் அமைச்சராக இருந்த பொழுது பனைவள த்தை பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்யும்படி இளைப்பாறிய நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களைக்கொண்ட குழுவை நியமித்து அந்தக் குழுவின்சிபார்சின்பேரில்தான் தற்போது பலருக்கும் பயன் அளிக்கக்கூடிய பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது.

1956ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரச்கட்சியினால் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட பொழுது பாராளுமன்றத்துக்குள்ளும் சிங்கள மக்கள் மத்தியிலும் எதுவித எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தமிழ் மக்களுக்காக வாதாடிய கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா லங்காசமசமாஜக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். தமிழ் மக்கள் அனைவரும் இவரை ஏகோமகமாக ஆதரித்து வெற்றியீட்டச்செய்தால் நாட்டிற்கு சுபிட்சமான எதிர்காலம் வருவது உறுதியாகும்'' என்றார். [கி]

# "மக்கள் விடுதலை முன்னணியினர் சிறிமாவைத் தூக்கிலிடமுயன்றால் நான் அவரைக் காப்பாற்றுவேன்" - ஜனாதிபதி ஜே. ஆர்.

[கொழும்பு]

'திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீது நான் கருணை காட்டியுள்ளேனென்றும், தாம் பதவியிலிருந்தால் அவர் செய்த பிழைகளுக்குத் தூக்குத்தண்டனை வழங்கியிருப்போமென்றும் மக்கள் விடுதலை முன்னணியினர் கூட்டமொன்றில் பேசியுள்ளனர். ஆனால் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன்; ம வி முன்னணியினர் கூறுவதுபோல திருமதி பண்டாரநாயக்காவை அவர்கள் தூக்கிலிட முயன்றால் அதனைத் தடுக்கும் முதலாவது நபராக நானே இருப்பேன்.'

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தன கொழும்பு மத்திய தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். இக்கூட்டத்துக்கு பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா தலைமைதாங்கினார்.

ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தன தொடர்ந்து அங்கு பேசுகையில் கூறியதாவது:–

'முன்னாள் அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயக்கா திருமதி பண்டாரநாயக்காவுக்கெதிராக பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டு ஒன்றினைக்கொண்டு வந்திருந்தார் இதனையடுத்து திருமதி சிரிமாவோ பண்டாரநாயக்காவே ஆணைக்குழுவொன்று அமைத்துத் தம்மை விசாரிக்குமாறு அப்போது கேட்டுக்கொண்டார்'.

பின்னர் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்சப்பட்டது இதில் அரைது ஆட்சியின் போது நியமனம்பெற்ற நீதியரசர்களே விசாரணைகளை மேற்கொண்டு அவரை குற்றவாளியாகக் கண்டனர்.

ம. வி. முன்னணி பற்றி மேலும் பேசுகையில், தானே திரு ரோகண விஜேவீராவை விடுதலைசெய்ததாகவும், இதற்குக் கைமாறாகவே அவர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றாரென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில், இத்தேர்தல் பந்தயத்தில் போட்டியிடுபவர்களில் ஜனாதிபதி திரு. ஜே. ஆரே உண்மையான குதிரையென்றும், ஏனையவர்கள் மட்டக்குதிரைகளென்றும் வர்ணித்தார். [கி]

ரூபவாகினியில்
திரைப்படங்களை தெளிவாக கண்டுகளிக்க
உத்தரவாதத்துடன்
சென்னை - ரூபவாகினி
ஏரியல் பொருத்திக்கொள்ளவும்
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்
வீனஸ்
றெக்கோடிங்
ரேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்
யாழ்ப்பாணம்.

# வெளிநாட்டு ஏஜென்சியால் ஏமாற்றப்பட்ட ஜே. பி. மனமுடைந்து தற்கொலை

புலோலி)

வெளிநாட்டு ஏஜென்சி தொடர்பாக இரண்டு லட்சம் ரூபா பணத்தினால் ஏமாற்றப் பட்ட சமாதான நீதவான் ஒருவர் மனமுடைந்து கிருமி நாசினி அருந்தித் தற்கொலை செய்த பரிதாபகரமான சம்பவமொன்று வல்வெட்டித் துறைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

வல்வெட்டியைச் சேர்ந்த அகில இலங்கை சமாதான நீதவானன ஐயாத்துரை கணேசலிங்கம் (வயது 49) என்பவரே கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டவராவர். இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை வடமராட்சிப் பகுதித் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளை மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் பொன்னையா சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

இறந்தவரால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எழுதப்பட்டிருந்த கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அக்கடிதத்தில், தான் சிங்கப்பூரைச் சேர்ந்த நாயுடு என்பவராலும், இன்னும் இருவரினாலும் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புவது சம்பந்தமாக இரண்டு லட்சம் ரூபாவால் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவும் அதனால்தான் தற்கொலை செய்வதாகவும், தான் கொடுக்க வேண்டிய பணத்தை கடித் கோவையைப் பார்த்துக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இறந்தவரின் மனைவி சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது: ''இறந்தவர் எனது கணவர். இவர் சம்பவதினம் காலை படுத்திருந்த அறைக்குள் 'நான் மருந்து குடித்துவிட்டேன். வயிறு எல்லாம் எரிகிறது' என்று சொல்லிக் கேட்டது. உடனே நான் அங்கு போனபோது எனது கணவரின் சகோதரனும் அங்கு வந்தார். இறந்தவரின் கையில் இருந்த மருந்துப் போத்தலொன்றை அவர் பறித்தார். எனினும் அவர் மருந்தைக் குடித்துவிட்டார். உடனடியாக அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றோம். அவர் இறந்துவிட்டார்''

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட மந்திகை அரசினர் வைத்தியசாலைப் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலித்குமார், இறந்தவரின் சகோதரன் ஐ. தியாகலிங்கம், இராசலிங்கம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். [அ]

## "இக்கல்லூரி அதிபர்களை" நிரந்தர மாக்கவும்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, புனிதசிசிலியா மகளிர் கல்லூரி அதிபர்களை அக்கல்லூரியின் தரத்திற்கமைவாக நிரந்தரமாக்க வேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளரைக் கோரியுள்ளது. இவ்விரு கல்லூரி அதிபர்களையும் நிரந்தரமாக்குவதில் சில அதிகாரிகள் வேண்டுமென்றே புறக்கணிப்பதாக தமக்கு புகார் கிடைத்துள்ளதாகவும் கல்வி அமைச்சு இவ் விடயத்தில் விசேட கவனம் செலுத்தி அப்பாடசாலைகளின் தரத்திற்கேற்ப இத்தற்காலிக அதிபர்களையும் கல்வி அமைச்சின் திட்டத்திற்கு அமைவாக 2ம் தர அதிபராக நியமிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வற்புறுத்தி இ. த. ஆ. சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் கடிதம் அனுப்பியுள்ளார். [மா]

## "தமிழரின் பாரம்பரிய கலைகளை வளர்க்கவேண்டும்"

யாழ்ப்பாணம்]

''தமிழ் பேசும் மக்களு'க்குப் பெருமை தேடித்தரும் கலைகளை நாம் வளர்க்க வேண்டும். தமிழ்மக்களின் பாரம்பரியக் கலைகளை வளர்த்து வரும் நாட்டியாலயங்களுக்கு நிதியுதவியளித்து ஊக்குவிக்க வேண்டும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட சபை உறுப்பினர் திரு. சி. நாகராஜா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கொக்குவில் கலைக்கோவில் அமரகலா நாட்டியாலயத்தின் ஏழாவது ஆண்டு விழாவில் உரையாற்றுகையில் கூறினர்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சட்டத்தரணி தவபாலன், கலைக்கோயில் நாட்டியாலயஅதிபர் செல்வி ரேலங்கி செல்லையா ஆகியோரும் உரையாற்றினர்.

நிகழ்ச்சியில் இடம் பெற்ற 'இலங்கை வேந்தன்' நாடகத்திற்கு பாராட்டுத் தெரிவிக்கப் பட்டது, திருமதி. நாகராஜா கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கினர்.

## பாராட்டு

[மாவிட்டபுரம்]

ஜனதிபதி வருகையின் போது காங்கேசன்துறைப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திறம்படச்செய்து சிறந்த சேவையாற்றியதற்காக காங்கேசன் துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு பொ. ஏ. ராமநாதனை பொலிஸ்மாஅதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் பாராட்டியுள்ளார்.

எதுவித அசம்பாவிதமும் நிகழாமல் முறையாக ஏற்பாடுகளைச் செய்து ஜனதிபதியின் வருகை சிறப்புற நடைபெற திரு இராமநாதன் எடுத்த நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டுவதாக பொலிஸ்மா அதிபர்தெரிவித்துள்ளார் (மா)

## கொலை

(யாழ்ப்பாணம்)

வெட்டுக்காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்ட ஏழாலை தெற்கைச்சேர்ந்த வாழைப்பழவியாபாரி குட்டித் தம்பி கனகேஸ்வரன் (34 வயது) என்பவரின் மரணம் கொலை எனத் தீர்ப்புவழங்கப்பட்டது. மல்லாகம் பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம், மரணவிசாரணை அதிகாரியினதும் சட்ட வைத்திய அதிகாரியினதும் அறிக்கையைத் தொடர்ந்து தீர்ப்புவழங்கினர்,

## ரூ. 200 அபராதம்

(சாவகச்சேரி)

26 பிரயாணிகளை ஏற்ற வேண்டிய மினிபஸ்ஸில் 49 பிரயாணிகளை ஏற்றிவந்தவருக்கு 200 ரூபா அபராதத்தை சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். யேசுதாசன் விதித்தார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் நடராசாவுக்கே இவ் அபராதம் விதிக்கப்பட்டது,

சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். சூரியப்பிரகாசத்தினால் இவ் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

நீதிபதி எதிரியைப்பார்த்து 49 பிரயாணிகளை ஏற்றிப் பிரயாணிகளுக்கு அசௌகரியத்தை உண்டுபண்ணியிருக்கிறீர். இனிமேல் இவ்விதம் இம்மன்றுக்குவந்தால் குற்றம் இருமடங்காகும். என எச்சரித்து 200 ரூபா அபராதம் விதித்தார்.





இப் பூரண சலுகை உங்கள் பாடசாலைக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் இலவசமாக வழங்குகிறது.

பாடசாலைகளில் விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் படி, எந்தப்பாடசாலையாயினும் 750 ரூபாவுக்கோ, அன்றி அதற்கு மேற்பட்ட பெறுமதிக்கோ, தீவடங்கிலும் உள்ள கூ. மொ. வி. விளையாட்டு உபகரண விற்பனை நிலையங்களிலிருந்து விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியும். உங்கள் பாடசாலை செய்யவேண்டியது ஆகக் குறைந்தது 3000 பாவித்த பெரெக் பட்டரிகளைச் சேகரிப்பது மட்டுமே.

**அதிக சேகரிப்பு - அதிக பயன் தரும்**

அதிக எண்ணிக்கை பட்டரிகளை சேகரித்தால் உங்கள் பாடசாலை, அதிக பெறுமானமுள்ள விளையாட்டு உபகரணங்களைப் பெறும். [3000 பெரெக் பட்டரிகளை சேகரித்தால் 750 ரூ. பெறு மானமுள்ள விளையாட்டு உபகரணங்கள், 4500 பெரெக் பட்டரிகளைச் சேகரித்தால் 1,125 ரூ. பெறுமானமுள்ள விளையாட்டு உபகரணங்களும் கிடைக்கும் அதேபோல் சேகரிப்புக்கேற்ப பெறுமானமும அதிகரிக்கும்]

உங்கள் பாடசாலை பெறக் கூடிய விளையாட்டு உபகரணங்களின் பெறுமதிக்கு கட்டுப்பாடு கிடையாது.

**விண்ணப்ப விபரம்**

உங்கள் பாடசாலை 3000 பாவித்த பெரெக் பட்டரிகளை சேகரித்ததும் அதிபர் மூலம் பின் வரும் முகவரிக்கு எமக்கு எழுத வேண்டும்.

இலவச விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளும் தகுதி பெற, பாடசாலைகள் பெரெக் பட்டரிகளை சேகரிக்கத் தொடங்கலாம்.

உங்கள் பாடசாலையின் கடிதம் எமக்குக் கிடைத்ததும் அங்கு விஜயம் செய்யும் எமது பிரதிநிதி பட்டரிகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு கிட்டிய கூ. மொ. வி. நிலைய விளையாட்டு உபகரணப் பிரிவில் மாற்றக்கூடிய பண வவுச்சரை வழங்குவார்.

முகவரி—
''உங்கள்-பாடசாலை-விளையாட்டு-உபகரணங்கள்'' திட்டம்
347, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2

**விசேஷ போனஸ் சலுகை**

பின்வரும் தரங்களிலிருந்து, 3000 பாவித்த பெரெக் பட்டரிகளை முதலில் சேகரிக்கும் பாடசாலைக்கு முறையே 3000 ரூ. பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

தரம் ''ஏ''—1000 மாணவர்கள் வரை
தரம் ''பி''—1001 முதல் 2500 மாணவர்
தரம் ''சீ''—2501 முதல் அதிக மாணவர்

அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கும் இச்சலுகை வழங்கப்படும்.

பெரெக்
BEREC
HTL BC 1184

காமன்வெல்த் விளையாட்டுகள்

# ஆஸ்திரேலியா தொடர்ந்தும் முன்னணியில்!

## பாரந்தூக்குவதில் நைஜீரிய மாணவன் முதலிடம்!

பிறிஸ்பேரின், அக் 6 'பிறிஸ்பேன் நகரில் நடைபெற்றுவரும் 'காமன்வெல்த்' விளையாட்டுப் போட்டிகளில் ஆஸ்திரேலியா தொடர்ந்தும் முன்னணியில் விளங்குகின்றது.

இது பெற்ற தங்கப்பதக்கங்களின் எண்ணிக்கை 20 ஆகவும், வெள்ளிப்பதக்கங்களின் எண்ணிக்கை17 ஆகவும், வெண்கலப்பதக்கங்களின் எண்ணிக்கை 16 ஆகவும் அதிகரித்துள்ளன.

இரண்டாமிடத்தை வகிக்கும் பிரிட்டன், 17 தங்கப் பதக்கங்களையும், 15 வெள்ளிப்பதக்கங்களையும், 10 வெண்கலப்பதக்கங்களையும்பெற்றுள்ளது.

மூன்றாமிடத்தை வகிக்கும் கனடா, 8 தங்கப்பதக்கங்களையும், 10வெள்ளிப் பதக்கங்களையும், 14 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளது

நைஜீரியாவைச் சேர்ந்த ஒலிவர் ஒரொக் என்ற 19 வயது மாணவன் பாரந்தூக்கும் போட்டியில்162.2 கிலோகிராம் எடையினைத்தூக்கி தமதுநாட்டுக்கு முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார். இப்போட்டியில் இங்கிலாந்தைச் சேர்ந்த கரி லாங் போர்ட் என்ற 29 வயது வீரர் இரண்டாமிடத்தைப் பெற்றார். (கி)


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-15 9-15
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-தீபா
முடிசூடா மன்னன்

சில தினங்கள் மட்டும்
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — சௌகார் ஜானகி
உயர்ந்த மனிதன்

**ராணி** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30.
கடைசி 4 தினங்கள்
ஜெமினி – சரோஜாதேவி – நாகேஷ்
பணமா பாசமா

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்
8-ம் திகதி முதல்
ரயில் பயணங்களில்.

**லிடோ** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி
தெய்வப் பிறவி

**றீகல்** [யாழ்.நகர்]
3-வது ஹவுஸ்புல் வாரம். 10-30, 2-30, 6-15 9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

Last 2 days
**சாந்தி** [யாழ்.நகர்]
Daily 5 shows
THE BODY
Strictly for Adults

**வின்ஸர்** (யாழ். நகர்)
குறிப்பிட்ட சிலதினங்கள்மட்டும் 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

**ஸ்ரீதர்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

**ராஜா** (யாழ்.நகர்)

இந்தியாவில் 300 நாட்களுக்குமேல்ஓடி பொன்விழாக் கொண்டாடிய வெற்றிச்சித்திரம்.
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன் வெள்ளிவிழாப்பட இயக்குநர் பாக்கியராஜ்


## மன்னார்செய்திகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### புதுப்பொலிவு

மன்னார் சிங்கள மகாவித்தியாலயத்தில் 40 ஆயிரம் ரூபா செலவில் பல் சிகிச்சை நிலையமொன்று நிறுவப்பட்டு வருகிறது.

இப் பல் சிகிச்சை நிலையம் திறக்கப்பட்டதும் மன்னார் கல்வி வட்டார மாணவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

எருக்கலம்பிட்டி– முந்தல் கடற்கரை வீதி கடல்தொழில் அமைச்சின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

### தொலைபேசிச் சேவை சீர்கேடு

தலைமன்னார் பகுதியில் தொலைபேசிச் சேவை சீர்கேடடைந்துள்ளதால் தலைமன்னார் பகுதி மக்கள் அருகிலுள்ள மன்னாருக்குக்கூட தொலைபேசித் தொடர்பை பெறமுடியாது திண்டாடுகின்றனர். இத் தொலைபேசி சேவை சீர்திருத்தம்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தலைமன்னார்பகுதி தொலைபேசி பாவனையாளர்கள் கவலைதெரிவிக்கின்றனர்.

### பொதுச் சந்தை

தலைமன்னார்பகுதியில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் பொதுச்சந்தை ஒன்று அமைக்கப்படும்.

இதற்கான நிதியினை மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் 83ம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கீடுசெய்வார்.

### கல்வி

ஒவ்வொருவரும் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி அறிவை ஊட்டவேண்டும். கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு சிறந்த மறைக் கல்வியை ஊட்டுவதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் நற்பிரசைகளாக வாழ வழிஏற்படும்.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார்– பெரிய குஞ்சிகுளத்தில் 105 சிறுவர்களுக்கு உறுதிப்பூசல் வழங்கி உரையாற்றிய மன்னார்மறை மாவட்ட ஆயர் பேருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

### மின்சாரம்

பேசாலை கிராமத்திற்கு எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் பேசாலை மீன்பிடி கூட்டுத்தாபனத்திலிருந்து மின்சார விநியோகம் வழங்கப்படும் இதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

பேசாலை மீன்பிடி கூட்டுத்தாபனத்திலிருந்து பேசாலை கிராமத்திற்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான மின்சார இணைப்பு வேலைகளை மேற்கொள்ளவென 3 லட்சத்து 16 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

# "ஜனநாயகம் செத்துவிட்டது!"

(மட்டக்களப்பு)

''சனநாயக அடிப்படையில் வெகுஜனரீதியில் மக்களைத் திரட்டி தமிழீழ விடுதலைக்கான போராடும் ஈழமாணவர் பொதுமன்ற அமைப்பாளர் திரு. டேவிட்சன் கைதுசெய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டது இந்த நாட்டில் ஜனநாயகம் மரணித்துவிட்டது என்பதை எடுத்துக்காட்டுகிறது. திரு. டேவிட்சன் உடனடியாக விடுதலை செய்யப்படாவிட்டால் நாடு பரந்த அளவில் போராட்டத்தைநாம் நடத்துவோம்''. என்று தமிழீழ விடுதலைக்கழக அமைப்புச் செயலாளர் திரு. இரா. வாசுதேவா விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''ஜனநாயகம்'' என போலிவேஷமிடுபவர்களின் ஆயுதப் படைகளினால் திரு. டேவிட்சன் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார். ஒரு இயக்கத்தின் சார்பில் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட முடியவில்லையென்றால் இதுவா சனநாயகம்?'' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 21ம் திகதி

வியாழக்கிழமை

(7—10—82)

**மேடம்:** உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும் பணவிவகாரத்தின் மூலம் பகை கொள்ளலாம் தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**இடபம்:** ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராதவிதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும் நிதானம்வேண்டும்.

**மிதுனம்:** குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும் எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள்

**கடகம்:** பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும் சிலருக்குஉஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படலாம் மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

**சிங்கம்:** கருத்து வேற்றுமைகள் மறைவதற்கு இடமுண்டு தங்கள் திறமைகளுக்கு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள் விரும்பிய பொருள் இன்று கிடைக்கலாம்.

**கன்னி:** எண்ணம்போல் வாழ்வு இன்றுமலரும் சிலருக்கு திடீர் திரவிய லாபமும் கிடைக்கலாம் கலகலப்பான தினம் இன்று உருவாகலாம்.

**துலாம்;** தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும். நண்பர்களே காலைவாரிவிடக்கூடும். சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** கனிவான சம்பவங்கள் இடம்பெறும் காதலர்கட்கு கனகுசியான தினம் சிலருக்குத் திடீர் திருமணமும் நடைபெறலாம் பொன்னான தினம்.

**தனு:** சிறுவிடயம் கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம் வீணான சந்தேகங்களும் தோன்றக் கூடும் உங்களை சிக்கவைப்பதற்காக சூழ்ச்சி வலை விரிக்கப்படும்.

**மகரம்:** தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணிய ஸ்தலயாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படலாம்.

**கும்பம்:** தொழில் துறையில் நல்ல மாற்றம தென்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**மீனம்:** உண்மைவழு நின்று உயர்வடைவீர்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கை உம்மீது பதியும் எதிர்பாரா அதிஷ்ட லாபங்கட்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மாணவர் சுற்றுலா.....

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பேட்டை ''ஈழநாடு'' காரியாலயம் உட்பட வடபகுதியிலுள்ள பயனுள்ள தொழிற்சாலைகளையும் மாணவர்கள் பார்வையிட்டனர்.

வித்தியாலய அதிபர் சங். சகோதரி நசரேத் தலைமையில் உதவி ஆசிரியர்கள் திரு. வ. செல்வநாயகம், திருமதி ஞானசேகரம், திருமதி என். தேவராசா பாடசாலை அபிவிருத்திசங்க செயலாளர் திரு எம். செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் இச் சுற்றுலாவுக்கு வழிகாட்டினர். (மா)

## யாழ். கல்வித் திணைக்கள 6ம் தர பிரவேசப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம்கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படும் 1983ம் ஆண்டுக்கான 6ம்தர பிரவேசப் பரீட்சை அடுத்த மாதம் 20ம்திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக வடமாநிலக் கல்வி அதிபதி பாடசாலைத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளாக யாழ். இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி உட்பட பன்னிரண்டு கல்லூரிகள் குறிப்பிட்டுள்ளன.

1982ம் ஆண்டில் 5ம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 25ம் திகதிக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்டுள்ள கல்லூரி அதிபர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மா-அ)

## திட்டமிட்ட...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

லாத் திண்டாட்டத்தினால் நலிவடைந்துள்ளார்கள். இன்னும் 40 வருடங்களில் மக்கள் தொகை இரட்டிப்பு மடங்காகியபின்னர் நிலைமை மோசமாகிவிடும் நமது சக்திக்குட்பட்ட ஒரேயொரு வழி குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்து வாழ்வதுதான்'' என்றார்.

தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. (அ)

# "சிங்கள தமிழ் இனப்பிரச்னை: பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பேன்"

## ஹெக்டர் கொப்பேகடுவ கூறுகிறார்

- இ. கந்தசாமி -

[கொழும்பு]

''சிங்கள தமிழ் இனப் பிரச்னையை பேச்சுவார்த்தைமூலம் தீர்ப்பேன்'' என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில்போட்டியிடும் திரு ஹெக்டர் கொப்பேகடுவ என்னிடம் தமது இல்லத்தில் வைத்துக் கூறினார்.

பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட சகலஜனநாயக விரோதச் சட்டங்களையும் நான் பதவிக்கு வந்தால் உடனடியாக நீக்குவேன். சிங்கள, தமிழ் மக்களுக்கு மத்தியிலுள்ள அரசுக்கு எதிரான சக்திகளை பழிவாங்கவே ஐ. தே. கட்சி அரசாங்கம் இது போன்ற சட்டங்களைகொண்டு வந்துள்ளது. இச் சட்டத்தின் மூலம் தமிழ் இளைஞர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். சிங்கள தமிழ் இனப் பிரச்னையைத் பேச்சுவர்த்தைமூலம் தீர்த்துவைப்பதற்குத் தீவிரமாக நடவடிக்கை எடுப்பேன்'' என்றும் அவர் மேலும் கூறினார்

### பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

''மூன்று இனக்கலவரங்கள் இந்த ஆட்சியின் காலத்தில் நடைபெற்றுள்ளது. காலம் தாழ்ந்தபோதிலும் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுப்பேன்'' என்றும் ஹெக்டர் உறுதி கூறினார்.

இனவெறி, வன்செயல் இந்நாட்டில் தலைதூக்கா வண்ணம் நடவடிக்கை எடுப்பேன். யாழ்ப்பாணம், காலி, மலையகம் போன்ற இடங்களில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்போம் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க விசாரணைக் குழுக்களை அமைப்போம் என்பது போன்றவற்றை முன்னரே அறிவித்துள்ளோம்'' என்றும் திரு. கொப்பேகடுவ சொன்னார்.

### வடபகுதி பயங்கரவாதம்

''வடக்கில் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு முக்கியகாரணம் இளைஞர்கள் மத்தியில் விரக்தி மனப்பான்மையும், பொருளாதார நெருக்கடியுமே!

''பொருளாதார ரீதியில் நல்லதொரு நிலைமை ஏற்படுத்தவேண்டியது நமது கடமை. இவ் இளைஞர்களுக்குப் பிரச்னையாக இருக்கின்ற மொழி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அக்கறை காட்டுவேன்'' என்றும் திரு. கொப்பேகடுவ தெரிவித்தார்.

### சுதந்திர வர்த்தக வலையம்

''சுதந்திர வர்த்தக வலையத்தின் கதி உங்கள் ஆட்சியில் எப்படியிருக்கும்?என்று கேட்டபோது அது அப்படியேஇருக்கும் எவ்வித மாற்றமும் இருக்காது என்றார்.

80 வேலைநிறுத்தம் பற்றியும் சொன்னார்: 'வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டு வேலை இழந்தோருக்கு நஷ்ட ஈட்டுடன் மேலும் வேலை வழங்குவோம்''

### யாழ். விவசாயிகள்

''யு. என். பி. அரசாங்கம் பதவி ஏற்றபின்னர் விவசாயிகள் குறிப்பாக யாழ். விவசாயிகள் பாதிகப்பட்டுள்ளனர். யாழ். விவசாயிகள் சுறுசுறுப்பானவர்கள். இந்நாட்டுக்கு மிகநல்லசேவை யாற்றியுள்ளார்கள், இந் நாட்டில் விளைவிக்கப்படக்கூடிய உபஉணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதால் வெளிநாட்டுக்குச் செலாவணி வெகுவாகப் பாதிக்கப்படும். நான் காணி, விவசாய அமைச்சராக இருந்தபோது இங்குஉற்பத்தி செய்யும் உபஉணவுப்பொருட்களை ஊக்குவிப்பதற்கு வெளிநாட்டு இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதித்தேன். இதனால் ஆரம்பத்தில் கஷ்டம் இருந்தது. ஆனாலும் படிப்படியாக உற்பத்தி அதிகரித்தது. விவசாயிகள் பயனடைந்தனர். வெங்காயம், மிளகாய் ஆகியவற்றின் மூலம் யாழ் விவசாயிகள் பயனடைந்தனர் என்றும் கொப்பேகடுவ சொன்னார்.

''வெங்காயம், மிளகாய் தடை செய்யப்பட்டு எட்டு மாதத்தின்பின், யாழ் மாவட்டத்தில் 22ஆயிரம் ஏக்கரில் செய்யப்பட்ட செய்கை 98ஆயிரம் ஏக்கரில் செய்யப்பட்டது'' என்றார் கொப்பேகடுவ. (இ)

---

### வானொலியில் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்

(கொழும்பு)

இம்மாதம் 20ந் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் வாக்குச்சீட்டுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எண்ணி முடிக்கப்பட்டதும் முடிவுகள் உடனுக்குடன் பொதுமக்களுக்கு வானொலி மூலம் அறிவிக்கப்படும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்மொழிச் சேவைகளின் மூலம் முடிவுகள் அறிவிக்கப்படும். (உ)

---

## ''யாழ். கல்வித் திணைக்களத்திற்கு ஆசிரியர்கள் செல்வதானால்....''

(கரவெட்டி)

ஆசிரியர்கள் தமது அலுவல்களின நிமித்தம் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வருவதாயின் திங்கட்கிழமைகளில் மாத்திரம் நண்பகல் 1.30 மணிக்குப் பின்னர் வரவேண்டும் என்று யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாகப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்க , ஆசிரியர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அடையாள அட்டை இலக்கத்தையும் இதற்கான விண்ணப்பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

- ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்திற்கு வரும்போது பாடசாலை அதிபரின் அனுமதியைப் பெற்று இருத்தல் வேண்டும்.
- கல்வித்திணைக்களப் பிரதான எழுதுவினைஞரிடம் உள்ள பதிவேட்டில் தமது பெயரையும் பாடசாலையின் பெயரையும் பதிவு செய்வதுடன், வருகையின் காரணத்தையும் பதிந்து கொள்ள வேண்டும்.
- எந்தச் சந்தர்ப்பத்திலும் விடய எழுதுநர்களை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்தலாகாது.
- நேர்முக உரையாடலுக்கு அனுமதி கேரும் அட்டையை நிரப்பி அதனைத் தாம் நேரடியாகச் சந்திக்க விரும்பும் பதவிநிலை உத்தியோகத்தருக்கு அனுப்பி அனுமதி பெற்ற பின்னரே சந்தித்தல் வேண்டும். [அ]

---

### டேவிட்சனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமானது. அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்துக்கு எடுத்துச்செல்லலாம். அவர் பொலிஸில் சரண் அடைந்தது பெருந்தன்மையானது. அது அவரது நேர்மையைக்காட்டுகிறது தமது இனத்தின் சுதந்திரத்துக்காகப் பாடுபடும் டேவிட்சன், தேவதாஸ், மற்றும் எல்லோரையும் மனிதாபிமானத்தின் பேரால் உடனே விடுவிக்கவேண்டும்''

---

### வெளிநாடு பயணம்

[கொழும்பு]

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இன்று சோவியத்துக்குப் பயணமாகிறார்.

பஹாமஸில் நடைபெறும் சர்வதேச பாராளுமன்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இம்மாதம் 10ம் திகதி பயணமாகிறார். [இ]

---

### இலவச....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பப்பத்திரத்தையும் தத்தமது பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் மூலமாக தொல்புரம் கமநலச் சேவை நிலையத்தில் சமர்ப்பித்து இந்த விவசாய அடையாள அட்டையை சுலபமாக விவசாயிகள் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் திரு. சூசைப்பிள்ளை இதுபற்றி தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

கமநலச் சேவை நிலையம் வழங்கும் சலுகைகளையும். உதவிகளையும் சிரமமின்றி பெற்றுக்கொள்வதற்கு இந்த விவசாய அடையாள அட்டைகளை ஒவ்வொரு விவசாயியும் கைவசம் வைத்திருக்கவேண்டியது அவசியம என்றும் அவர் தெரிவித்தார். [க]

---

சுன்னாகம் வங்கியில் சம்பவம்:

## 18,000 ரூ. நோட்டுகளுக்குள் ஒரு 100 ரூபா கள்ளநோட்டு!

[யாழ்ப்பாணம்)

வங்கிக் காசாளரினதும், முகாமைபாளரினதும் நுணுக்கமான பரிசோதனையால் 18 ஆயிரம் ரூபா நோட்டுக்களுக்குள் நூறுரூபா கள்ள நோட்டொன்று இருக்கக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுன்னாகத்திலுள்ள இலங்கை வங்கிக்கிளையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது.

இணுவிலைச் சேர்ந்த வர்த்தகரான கந்தையா குமாரசாமி என்பவர் மேற்குறிப்பிட்ட வங்கியில் 18 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடச் சென்றவராவர்.

வங்கியின் உதவிக் காசாளர் இரத்தினம் பரமநாதன் இந்தக்கள்ளநோட்டை கண்டுபிடித்தார்.

இவர் வங்கி முகாமையாளர் திரு. மயில்வாகனம் வாமதேவாவுக்கு இதுபற்றித் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் சுன்னாகம் பொலிசுக்கு அறிவித்தார். பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் பணிப்பின்பேரில் சார்ஜண்ட் எஸ். சிவலிங்கம் குறிப்பிட்ட வங்கிக்குச் சென்று கள்ளநூறு ரூபா நோட்டையும்கைப்பற்றி சம்பந்தப்பட்ட கந்தையா குமாரசாமி என்பவரையும் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளார். (மா)

---

### யாருடையது?

யாழ். சிவதொண்டன் நிலையத்திற்கு அருகில் காங்கேசன்துறை வீதியில திறப்பொன்றைக் கண்டெடுத்து திரு க. திருஞானம் என்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

---

### ஜனாதிபதி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் மாவட்டசபைகளிலும் காரியங்களைச் சாதிக்கும் சில பாக்கியம் அவர்களின் தலைவர் திரு தொண்டமானை ஜே ஆர். மந்திரி ஆக்கியமையால் அவரின் மூலம் இழந்த உரிமைகளைப் பெறும் வாய்ப்பு கிடைத்தது.

இலங்கை ஜனாதிபதி தேர்வு, எங்களிடம் மதிப்பிடற்கரிய உயர்ந்த சிறந்த தேசிய வாக்குரிமையை எங்களுக்குத் தந்திருக்கின்றது இவ்வுரிமை சிறுபான்மை மக்களுக்கும் இருக்க வேண்டும் என்று எண்ணி இந்த உரிமையை எமக்கு அளித்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தவாகும். இந்தியவம்சாவளியினரின் இன்னல்களைக்களைவதும், தமிழ்பிரதேசங்களில் சமஷ்டி ஆட்சியைக் காண்பதும், தமிழ்த்தந்தை எஸ். ஜே வியின் முக்கிய குறிக்கோளாகும்.

க. இரத்தினவேல்
சுழிபுரம்

---

### 31 லட்சம்...

5-ம் பக்கத் தொடர்ச்சி)

தியைக் குறைத்து எல்லாவாற்றையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து எமது நாட்டு விவசாயிகளின வயிற்றிலடித்துள்ளது.

மக்கள் இழந்த மானியம் மீண்டும் வழங்கப்படும். மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட கூப்பன் புத்தகங்கள் மீண்டும் வழங்கப்படும்.

கூப்பன் புத்தகங்கள் மூலம் மக்களுக்கு பல மானியங்களை வழங்குவோம்.

---


## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

### புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.